செ. கு. எண்:297 நாள் :10.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.11.2013

20.9.2013 அன்று வீட்டின் அருகே அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கொணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தனசேகரன் என்பவரின் மகன் கலைவாணன்;

28.9.2013 அன்று விவசாய நிலத்திற்கு செல்லும் போது அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் திருவள்ளூர் மாவட்டம், ஈன்றபேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேசன் என்பவரின் மனைவி துலுக்கானம் திரு. ராகவன் என்பவரின் மனைவி காயத்ரி;

29.9.2013 அன்று வீட்டின் அருகே அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் சென்னை, ஆயிரம் விளக்கு பகுதியைச் சேர்ந்த திரு. சாமுவேல் கனகராஜ்;

3.10.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி அருகே மழை நீர் சேகரிப்பு பணிக்காக பள்ளம் தோண்டிய போது, சென்னை, கொளத்தூரைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரின் மகன் பாலமுருகன்;

7.10.2013 அன்று சென்னை, ராமாபுரம், குறிஞ்சி நகரைச் சேர்ந்த திரு. தீபன் ராஜ் என்பவர் விருகம்பாக்கத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்தில் பணியிலிருக்கும் போது மாடியிலிருந்து தவறி கீழே விழுந்த போது மின்சாரம் தாக்கியும்;

11.10.2013 அன்று வீட்டின் அருகே காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பொலம்பாக்கம், கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னன் என்பவரின் மகன் ஏழுமலை;

12.10.2013 அன்று தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கண்டியூர் சரகம், கீழத்திருப்பந்துருத்தி கிராமம் அருகில், கண்டியூர் வாய்க்கால் கரையில் பழுதடைந்த தண்ணீர் குழாயினை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது நடுக்காவேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. தமிழழகன் மற்றும் திரு. பழனி;

15.10.2013 அன்று திருநெல்வேலி மாவட்டம், கருணை ஆற்றில் குளிக்கும் போது அறுந்த கிடந்த மின்சார ஒயரை மிதித்ததால் அம்பாசமுத்திரம் வட்டம், வடக்கு பாப்பான்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.காமாட்சி மற்றும் திரு. ரமேஷ்;

25.10.2013 அன்று ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மின்மோட்டாரை இயக்கும் போது திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், வேலஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. நரசிம்மன் என்பவரின் மகன் சிறுவன் தனசேகரன் ஆகியோர்,

–– மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9